செ.வெ.எண்: 51/ பிப்ரவரி /2020 நாள்: 19.02.2020

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழு (2018-2020) வரை வருகின்ற 27.02.2020 அன்று வருகை தர உள்ளனர் – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

----------

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் காட்பாடி சட்டமன்ற உறுப்பினர் திரு.துரைமுருகன் அவர்கள் தலைமையில் 18 சட்டமன்ற உறுப்பினர்கள் வருகை தர உள்ளனர். இவர்களுடன் செயலாளர், இணைச் செயலாளர் மற்றும் துணைச் செயலாளர் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை பொதுக்கணக்குக் குழு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கைகளில் பொருளாதாரப் பிரிவு, பொது மற்றும் சமூகப் பிரிவு தணிக்கை, வருவாய்ப் பிரிவு தணிக்கை, உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான தணிக்கை பத்திகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட உயர் அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடைபெற உள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, பள்ளி கல்வித்துறை, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, வேளாண்மைத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை, பொதுப்பணித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, தொழில்துறை, எரிசக்தித் துறை, போக்குவரத்துத் துறை, உயர்கல்வித்துறை ஆகிய துறைகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சட்டமன்றப் பேரவை பொதுக்கணக்குக் குழு தணிக்கை பத்திகள் குறித்து ஆய்வு செய்ய உள்ளனர். மேலும், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்தும் பார்வையிட உள்ளனர். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு :

செ.த 19/2

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.